தென்மாகாண கல்வித் திணைக்களம் - தமிழ்மொழி பாடசாலைகள் பிரிவு

ஆண்டிறுதிப் பரீட்சை – 2018

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் (I), (II)

நேரம் 10 காலம்:- 03 மணித்தியாலம்

பகுதி (I)

எல்லா வினாக்களுக்கும் சரியான விடை தருக.

1-40 வரையான வினாக்களில் 1,2,3,4 ஆகிய விடைகளில் சரியானது அல்லது மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

தரப்பட்டுள்ள விடைத்தாள்களில் ஒவ்வொரு வினாக்களுக்கமான உரிய விடையை அடையாளமிடுக.

பின்வரும் சம்பவத்தை வாசித்து 01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

"விஷ்வ இன்ஜினியரின்" என்ற பெயரில் வீடுகளை நிர்மாணம் செய்யும் வியாபாரமொன்றை நடாத்திச் செல்லும் விஷ்வ என்பவருக்கு 2017 ம் ஆண்டில் சிறந்த நிர்மாணிப்பாளர் விருது கிடைக்கப் பெற்றது. விஷ்வ என்பவரால் தயாரிக்கப்படும் பசுமையான கூரைத் தகடுகள் மட்டும் அவரது நிர்மாணப் பணிக்காக பயன்படுத்தப்படுகின்றது. அவர் வீட்டு நிர்மாணத்திட்டம் தொடர்பான பாடநெறியொன்றை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளார்.

1. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் விஷ்வ இன்ஜினியரின் வியாபாரத்தின் மூலம் நிறைவு செய்யப்படும் அடிப்படை மனிதத் தேவை யாது?

1) உணவு 2) உடை 3) வீடு 4) கல்வி

2. விஷ்வ என்பவரின் வியாபாரத்தின் மூலம் பயன்படுத்தப்படும் கூரைத்தகடுகள் உள்ளடங்கும் உற்பத்திக் காரணி யாது?

1) நிலம் 2) உழைப்பு 3) மூலதனம் 4) முயற்சி

3. இச்சம்பவத்தின் மூலம் குறிப்பிடப்படும் விஷ்வ இன்ஜினியரின் வியாபாரம் உரித்தாகும் வியாபார ஒழுங்கமைப்பு யாது?

1) தனி வியாபாரம் 2) பங்குடமை வியாபாரம்
3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி 4) சங்க அமைப்பு

4. வியாபார உரிமையாளர் மூலம் வீடு நிர்மாணத் திட்டமிடல் தொடர்பான பாடநெறி ஒன்றை நிறைவு செய்யப்பட்டிருப்பது அவரது வியாபாரத்திற்கு

1) பலமாகும் 2) பலவீனமாகும் 3) சந்தர்ப்பமாகும் 4) அச்சுறுத்தலாகும்

5. மேலுள்ள சம்பவத்தின் மூலம் குறிப்பிடப்படும் வியாபாரம் தொடர்பான சரியான கூற்றை தெரிவு செய்க

1) இவ்வியாபாரத்திற்கு சட்ட ஆளுமை காணப்படுகின்றது
2) இவ்வியாபாரத்திற்கு பெயர் பதிவு கட்டாயம்
3) இவ்வியாபாரத்தில் விஷ்வ என்பவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது
4) இவ்வியாபாரத்தின் பெயர் பதிவு கட்டாயமன்று

6. தேவை, விருப்பம் என்பவற்றை முறையாக் காட்டும் விடையாக அமைவது

1) போக்குவரத்து, சுகாதாரம்
2) அடுக்குமாடி வீடு, குடிசை வீடு
3) பாதுகாப்பு, சகாதாரம்
4) உணவு, பனிஸ்

7. உலக வியாபார சந்தையின் விலைக்கமைய பொருட்களின் விலை பொருத்தப்பாடு தொடர்பாக விலைச் சூத்தரமொன்றை மாதாந்தம் நடைமுறைப்படுத்த அரசால் சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்படும் வியாபாரச் சூழல் எது?

1) தொழிநுட்ப சூழல்
2) சட்டச் சூழல்
3) பூகோள சூழல்
4) பொரளாதாரச் சூழல்

8. பின்வருவனவற்றில் உற்பத்திப் பொருட்களை மாத்திரம் உள்ளடக்கிய விடைத் தொகுதியைத் தெரிவு செய்க

A - பண்டம்
B - உழைப்பு
C - பூமி
D - சேவை
E - மூலதனம்
F - உழைப்பு

1) A,D
2) A,E
3) B,C
4) E,F

9. "Enterprises SriLanka" செயற்றிட்டம் மூலம் சிறிய வியாபாரிகளுக்கு வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு கடன் உதவித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இது வியாபாரத்திற்கு

1) பலமாகும்
2) பலவீனமாகும்
3) சந்தர்ப்பமாகும்
4) அச்சுறுத்தலாகும்

10. வியாபார நிலையமொன்றில் மோட்டார் வாகனம், வியாபார ஊழியர்கள் அடங்கும் உற்பத்திக் காரணியை முறையாகக் காட்டும் விடைத் தொகுதி எது?

1) நிலம், உழைப்பு
2) நிலம், மூலதனம்
3) மூலதனம், முயற்சி
4) மூலதனம் உழைப்பு

11. வியாபார நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் இணையம், இலத்திரனியல் பணம் ஆகிய காரணிகள் உள்ளடங்கும் வியாபாரச் சூழல் எது?

1) பொருளாதாரச் சூழல்
2) தொழிநுட்பச் சூழல்
3) சட்டச் சூழல்
4) பூகோளச் சூழல்

12. தரமான உற்பத்திப் பொருள்களைப் பெறல், சாதாரண விலை ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அக்கறை செலுத்தும் தரப்பினர் எது?

1) உரிமையாளர்
2) ஊழியர்
3) வாடிக்கையாளர்
4) முகாமையாளர்

13. உரிமை அடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்தும் போது தனியார் துறைக்கு உட்படாத வியாபார ஒழுங்கமைப்பு எது?

1) தனியார் உரிமை வியாபாரம்
2) பங்குடமை வியாபாரம்
3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
4) அரச கூட்டுத்தாபனம்

14. பின்வரும் x நிரலில் வியாபார ஒழுங்கமைப்பு வகைகளும், y நிரலில் அவற்றிற்குரிய உதாரணங்களும் தரப்பட்டுள்ளதன.

x	y
1. தனியாள் உரிமை வியாபாரம்	A. சில்வாவும் புதல்வர்களும்
2. பங்குடமை வியாபாரம்	B. அரச ஒசுல
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி	C. கோசல ஸ்டோர்ஸ்
4. அரச கூட்டுத்தாபனம்	D. வரையறுக்கப்பட்ட நாமல் கம்பனி

X நிரலில் தரப்பட்டுள்ள வியாபார ஒழுங்கமைப்பு Y நிரலில் தரப்பட்டுள்ள உதாரணங் களுடன் முறையாகப் பொருந்தும் விடைத் தொகுதி

1) A,B,D,C, 2) B,C,D,A 3) C,B,A,D 4) C,A,D,B

15. முதுமால திஸாநாயக "முது கெபேஃ" என்ற பெயரில் ஹோட்டல் ஒன்றை ஆரம்பிக்க உத்தேசித்தார். இவ்வியாபாரத்துடன் தொடர்புடைய சரியான கூற்று எது?

1) இது பங்குடைமை வியாபாரமாகும்
2) இவ்வியாபாரத்தின் பெயரினை பதிவு செய்வது கட்டாயம்
3) இவ்வியாபாரத்தின் பெயரினை பதிவு செய்வது கட்டாயமன்று
4) இவ்வியாபாரப் பெயரினை பதிவு செய்வதன் மூலம் வியாபாரத்திற்கு உட்பட்ட ஆளுமை கிடைக்கப்பெறும்

16. ஜனநாயக ரீதியிலான நிர்வாகத்தை உடைய, பொதுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அங்கத்தவர்களின் சம உரிமையைக் கொண்ட வியாபார ஒழுங்கமைப்பு எது?

1) கூட்டுறவு சங்கம் 2) திணைக்களம்
3) பங்குடமை வியாபாரம் 4) அரச கூட்டுத்தாபனம்.

17. எந்தவொரு வணிகத்திற்கும் பொதுவான பண்பு யாது?

1) வரையறுக்கப்பட்ட பொறுப்பு 2) நோக்கம்
3) தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் 4) சட்ட ஆளுமை

18. வியாபார ஒழுங்கமைப்பு வகைகள் சில கீழே காட்டப்பட்டுள்ளதன

A – தனி வியாபாரம் B – திணைக்களம்
C – கூட்டிணைக்கப்பட்ட கம்பனி D - அரச கம்பனி
E - அரச கூட்டுத்தாபனம் F - கூட்டுறவு

இவ்வியாபார ஒழுங்கமைப்பு வகைகளுள் பொதுத் துறைக்கு உரித்தான வியாபார ஒழுங்கமைப்பு மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி

1) A ,B,C 2) B ,C,D 3) B,D,F 4) D,E,F

19. கணக்கீட்டின் பிரதான நோக்கம்

1) அக்கறை செலுத்தும் தரப்பினருக்கு தீர்மானமெடுப்பதற்கு பயனுள்ள தகவல் வழங்கல்
2) வியாபாரத்தினால் உழைக்கப்பட்ட இலாப நட்டங்களை அறிந்து கொள்ளல்
3) வியாபாரத்தின் மொத்த சொத்து, பொறுப்பு என்பவற்றை அறிந்து கொள்ளல்
4) வியாபாரத்தின் நிதிநிலைமை சாதகமான முறையில் காணப்படுகின்றதா என்பதை அறிய

20. வியாபாரமொன்றில் காணப்படும் நடைமுறைச் சொத்துக்களுக்கு உரிய உதாரணங்களைக் காட்டும் தொகுதி எது?

1) காணி, இருப்பு, கடன்பட்டோர்
2) தளபாடம், கடன்பட்டோர், காசு மீதி
3) மோட்டார், இருப்பு, கடன்பட்டோர்
4) இருப்பு, கடன்பட்டோர், காசுமீதி

21. வியாபாரம் ஒன்று வணிக வங்கிகளினால் பெற்றுக்கொள்ளும் "வங்கி மேலதிக பற்று" உரித்தாவது

1) நடைமுறைச் சொத்து
2) நடைமுறைப் பொறுப்பு
3) நடைமுறை அல்லாப் பொறுப்பு
4) உரிமை

22. வியாபாரமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் பின்வருமாறு

ரூபா 15000 பெறுமதியான பண்டத் தொகுதியொன்று உடன் காசிற்கு வாங்கப்பட்டது.

இக்கொடுக்கல் வாங்கல் மூலம் வியாபாரத்தின்

1) சொத்து, பொறுப்பு மாத்திரம் மாற்றமடையும்
2) பொறுப்பு மாத்திரம் மாற்றமடையும்
3) சொத்து மாத்திரம் மாற்றமடையும்
4) சொத்து, பொறுப்பு மற்றும் உரிமை மாற்றமடையும்

23. வியாபாரமொன்றின் பேரேட்டில் காணப்படும் சம்பளக் கணக்கு ____(1)____ கணக்காகும்.

விற்பனைக் கணக்கு ____(2)____ கணக்காகும்.

மேலுள்ள (1), (2) ஆகிய இடைவெளிகளுக்கு பொருத்தமான விடைத்தொகுதி முறையே

1) வருமானம் , செலவு
2) உரிமை, செலவு
3) சொத்து, பொறுப்பு
4) செலவு, வருமானம்

24. பற்றுச்சீட்டு, கொடுப்பனவுக் கச்சாத்து என்பவற்றை பயன்படுத்தும் முதன்மை ஏடு

1) காசேடு
2) சில்லறைக் காசேடு
3) கொள்வனவு நாளேடு
4) விற்பனை நாளேடு

25. சொத்து அதிகரித்து சொத்து குறையும் கொடுக்கல் வாங்கல் எது?

1) ரூ 8000 பெறுமதியான காப்புறுதிக் கட்டணம் செலுத்தல்
2) ரூ 75 000 பெறுமதியான இயந்திரம் கடனுக்குக் கொள்வனவு
3) ரூ 4000 பெறுமதியான தரகு வருமானம் கிடைக்கப்பெறல்
4) ரூ 12000பெறுமதியான காரியாலய உபகரணம் கொள்வனவு செய்தல்

26. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுள் உரிமை குறைவதற்கான கொடுக்கல் வாங்கல் எது?

1) ரூ 9000 பெறுமதியான தரகு வருமானம் கிடைத்தல்
2) உரிமையாளர் இட்ட மேலதிக மூலதனம் ரூ 50000
3) உரிமையாளர் தனது சொந்தத் தேவை கருதி ரூ 10000 வியாபாரத்திலிருந்து பெற்றுக் கொண்டார்
4) ரூ 80 000 பெறுமதியான தளபாடம் கொள்வனவு

27. பற்றுக் கணக்கு உரித்தாகும் கணக்கு வகை எது?

1) உரிமை கணக்கு
2) பொறுப்புக் கணக்கு
3) சொத்துக் கணக்கு
4) செலவுக் கணக்கு

28. கொடுக்கல் வாங்கல் ஒன்று கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கம் செலுத்தும் முறை பின்வருமாறு

சொத்து	=	உரிமை	+	பொறுப்பு
-150000	=	-		50000

மேலுள்ள சமன்பாட்டின் மூலம் காட்டப்படும் கொடுக்கல் வாங்கல் பின்வருவனவற்றுள் எது?

1) கடன் கொடுத்தோருக்கு ரூ 50 000 செலுத்தல்
2) ரூ 50000 பெறுமதியான பண்டங்கள் கடனுக்குக் கொள்வனவு
3) வங்கிக் கடனில் ரூ 50000 திருப்பிச் செலுத்தல்
4) உரிமையாளர் ரூ 50000 காசாக மூலதனமிடல்

29. பின்வரும் x நிரலில் கணக்கு வகைகளும், y நிரலில் பேரேட்டுக் கணக்குகளும் காட்டப்பட்டுள்ளன

x	y
1. சொத்துக் கணக்கு	A. விற்பனைக் கணக்கு
2. பொறுப்புக் கணக்கு	B. மின்கட்டணக் கணக்கு
3. வருமானக் கணக்கு	C. கடன் கொடுத்தோர் கணக்கு
4. செலவுக் கணக்கு	D. தளபாடக் கணக்கு

X நிரலில் காணப்படும் கணக்கு வகைகளுக்கு Y நிரலில் காட்டப்படும் பேரேட்டுக் கணக்குகளுக்கு பொருந்தும் முறையே

1) A,B,D,E
2) B,D,C,A
3) D,C,A,B
4) D,A,B,C

30. வியாபாரமொன்றின் ரூ 5000 பெறுமதியான காப்புறுதிக் கட்டணம் செலுத்தவதற்கான (காசாக) மூல ஆவணம், முதன்மை ஏடு என்பவற்றை முறையே காட்டும் அமைப்புத் தொகுதி யாது?

1) கொடுப்பனவுக் கச்சாத்து, பற்றுச்சீட்டு
2) காசேடு, கொடுப்பனவுக் கச்சாத்து
3) நாட்குறிப்புக் கச்சாத்து, காசேடு
4) கொடுப்பனவுக் கச்சாத்து, காசேடு

31. கோசல வியாபாரத்தில் கடன்பட்டோரான நுவனிடமிருந்து ரூ 80000 பெறுமதியான கடன் தொகையொன்றைப் பெறும் போது 5% கழிவு வழங்கப்பட்டது. இது கோசல வியாபாரத்தின்

1) ரூ 4000 கொடுத்த கழிவாகும்
2) ரூ 4000 பெற்ற கழிவாகும்
3) ரூ 8000 கொடுத்த கழிவாகும்
4) ரூ 80 000 பெற்ற கழிவாகம்

32. சில்லறைக் காசு வசக்கட்டு என்பதன் மூலம் கருதப்படுவது

1) பிரதான காசாளர்களின் செலவுகளின் கூட்டுத் தொகை
2) எல்லா சில்லறைக் காசுக் கணக்குகளின் கூட்டுத் தொகை
3) சில்லறை காசு கிடைப்பனவுகளின் கூட்டுத் தொகை
4) பிரதான காசாளர் சில்லறைக் காசாளருக்கு வழங்கும் சிறு கொடுப்பனவு

33. அநுர வியாபாரத்தின் சில்லறைக் காசு வசக்கட்டுப் பெறமதி ரூ 5000 ஆகும். 2017.12.31 இல் சில்லறைக் காசாளரிடம் இருந்த பணத்தொகை ரூ 250 ஆகும். அத்தினத்தில் சில்லறைக் காசு வசக்கட்டு மீள் நிரப்பப்பட்டது. சில்லறைக் காசு வசக்கட்டு மீள் நிரப்பலின் போது உரிய இரட்டைப் பதிவினை தருக

1) சில்லறைக் காசுக் கணக்கு – வரவு ரூ 5000
   சில்லறை காசுக் கணக்கு – செலவு ரூ 5000
2) சில்லறைக் காசுக் கணக்கு – வரவு ரூ 4750
   காசுக் கணக்கு – செலவு ரூ 4750
3) காசுக் கணக்கு – வரவு ரூ 5000
   சில்லறை காசுக் கணக்கு – செலவு ரூ 5000
4) காசுக் கணக்கு – வரவு ரூ 4750
   சில்லறை காசுக் கணக்கு – செலவு ரூ 4750

34. வங்கிக் கூற்றொன்றின் வரவுப் பக்கத்தில் காட்டப்படுவது

1) கடன்பட்டோர் வைப்பு
2) காசு வைப்பு
3) வங்கிக் கட்டணம்
4) காசோலை வைப்பு

35. வியாபாரமொன்றில் வங்கிக் கணக்கின் செலவு மீதி அவ் வியாபாரத்தின்

1) சொத்தாகும்
2) பொறுப்பாகும்
3) வருமானமாகும்
4) செலவாகும்

36. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களினுள் பொது நாட்குறிப்பேட்டில் உள்ளடங்கும் கொடுக்கல் வாங்கல் எது?

1) வியாபாரத்தின் பயன்பாட்டிற்காக இயந்திரமொன்று கடன் அடிப்படையில் கொள்வனவு செய்தல்
2) பண்டங்களை கடனுக்கு கொள்வனவு செய்தல்
3) உடன் காசுக்கு விற்பனை
4) பண்டங்களை கடனுக்கு விற்பனை

37. கொள்வனவு நாளேடு

1) பேரேட்டுக் கணக்காகும்
2) முதன்மை ஏடாகும்
3) மூல ஆவணமாகும்
4) நிதி நிலைமைக் கூற்றாகும்

38. மானெல் தனது வியாபாரத்தில் உற்பத்தி செய்யப்படும் பழகேக் 10 kg இனை தனது வீட்டு வைபவமொன்றுக்கு பெற்றுக்கொள்வதைப் பதிவது

1) விற்பனை நாளேடு
2) கொள்வனவு நாளேடு
3) கொள்வனவு கணக்கு
4) பொது நாட்குறிப்பேடு

பின்வரும் தகவல்களைக் கருத்திற் கொண்டு 39-40 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

கடன்பட்டோர் ஒருவருக்கு கொடுத்த கழிவு ரூ 2400
வியாபாரத்தில் பதிவு செய்த விதம் பின்வரும் இரட்டைப் பதிவு மூலம் காட்டப்பட்டுள்ளது.
கொடுத்த கழிவுக் கணக்கு வரவு 4200
கடன்பட்டோர் கணக்கு செலவு 4200

39. மேலுள்ள பதிவின் மூலம்

1) பரீட்சை மீதியில் வரவு, செலவு பக்கங்களில் மீதிகளின் கூட்டுத் தொகை சமப்படவில்லை
2) தொங்கல் கணக்கில் ரூ 1800 பெறுமதியான தொகை வரவு வைக்கப்படும்
3) கொடுத்த கழிவு ரூ 1800 உரிய கணக்குகளில் கூடுதலாகப் பதியப்பட்டுள்ளது
4) கொடுத்த வரவு ரூ 1800 உரிய கணக்குகளில் பிழையான பக்கத்தில் கூடுதலாகப் பதியப்பட்டுள்ளது

40. மேலுள்ள வழுக்களைத் திருத்தும் இரட்டைப் பதிவு எது?

1) கடன்பட்டோர் கணக்கு வரவு ரூ 1800
   கடன் கொடுத்த கழிவு கணக்கு செலவு ரூ 1800
2) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூ 1800
   கடன்பட்டோர் கணக்கு செலவு ரூ 1800
3) கொடுத்த கழிவு கணக்கு வரவு ரூ 2400
   கடன்பட்டோர் கணக்கு செலவு ரூ 2400
4) கடன்பட்டோர் கணக்கு வரவு ரூ 4200
   கொடுத்த கழிவு கணக்கு செலவு ரூ 4200

பகுதி (II)

- **கவனிக்க வேண்டியது:-**
- **முதலாம் வினா உட்பட பகுதி (I) இலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி (II) இலிருந்து இரண்டு வினாக்களுக்கும் மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. பின்வரும் சம்வத்தை வாசித்து (I) – (X) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

தேசிய மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தின் பட்டதாரியான ஹரித தனது சகோதரியான லதாவுடன் இணைந்து 2017.01.01 இல் ரூபா 150 000 வீதம் மூலதனமிட்டு "ஹரித லதா ஹெல ஒசு" என்ற பெயரில் தேசிய ஔடத சந்தைப்படுத்தல் விற்பனை நிலையமொன்றை அரச ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அண்மையில் வாடகைக் கட்டடமொன்றில் ஆரம்பித்தனர். அத்தினத்திலேயே வங்கியிலிருந்து ரூ 200 000 பெறுமதியான நீண்டகால கடன் ஒன்றைப் பெற்றுக் கொண்டனர். ஜனவரி மாதத்தினுள் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

ஔடதங்கள் கொள்வனவு	ரூ 425 000
மின்கட்டணச் செலவு	ரூ 3 500
வாடகைச் செலவு	ரூ 6 500
ஔடத விற்பனையால் பெற்ற வருமானம்	ரூ 475 000

i. இவ் வியாபாரம் உள்ளடங்கும் ஒழுங்கமைப்பு வகை எது?
ii. மேலே பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசதுறை வியாபார ஒழுங்கமைப்பொன்றை தருக?
iii. "ஹரித லதா ஹெல ஒசு" வியாபாரம் உள்ளடங்கும் வியாபார ஒழுங்கமைப்பின் அனுகூலம் 2 தருக?
iv. "ஹரித லதா ஹெல ஒசு" வியாபார அமைப்பு தனது பெயரினைப் பதிவு செய்ய வேண்டுமா? உமது விடைக்கான காரணம் தருக?
v. "ஹரித லதா ஹெல ஒசு" வியாபாரத்தின் பலம், பலவீனம் என்பவற்றை எழுதுக?
vi. இவ்வியாபாரத்தில் பேணப்படும் முதன்மை ஏடுகள் இரண்டு தருக?
vii. 2017.01.01 இல் வியாபாரத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டை பெறுமதிகளுடன் காட்டுக?
viii. 2017.01.01 இல் இவ்வியாபாரத்தின் மூலதனமிட்டதற்கான இரட்டைப் பதிவினைத் தருக?
ix. இவ்வியாபாரத்தில், நடைமுறையல்லாப் பொறுப்பு எவ்வளவு?
x. மேலுள்ள வியாபாரத்தில் வருமான, செலவுக் கணக்குகளில் உள்ளடக்கக்கூடிய விடயங்கள் ஒவ்வொன்று வீதம் எழுதுக?

பகுதி (I) – வணிகக் கல்வி

- இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

02. i. ஆதிகாலத்தில் காணப்பட்ட பண்டமாற்று முறை / பாட்டர் முறை என்றால் என்ன?

ii. தேவை , விருப்பம் என்பவற்றை வெவ்வேறாக விளக்குக?

iii. பின்வரும் கூற்றுக்கள் உண்மை / உண்மையன்று என்பதைக் குறிப்பிடுக.

A- தேவைகளை உருவாக்க முடியாது. விருப்பங்களை வணிகர்களால் தோற்றுவிக்க முடியும்.

B - உள்ளகச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் பலம், பலவீனம் என்பவற்றை இனங்காணலாம்.

C - உற்பத்தியின் போது மனிதனால் தயார் செய்யப்படுபவை நிலம் எனக் கருதப்படும்.

D - கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் உரிமை அடிப்படையில் அரச துறை வணிகங்களாக கருதப்படும்

iv. பின்வரும் அக்கறை செலுத்தும் தரப்பினரிடமிருந்த வியாபாரம் ஒன்று எதிர்பார்க்கும் பங்களிப்பினை உதாரணம் மூலம் காட்டுக.

A - முகாமையாளர்

B - அரசு

03. i. "மஹீஷா" என்பவர் தென்னை மரத்திலிருந்து அகற்றும் பகுதிகளைப் பயன்படுத்தி உதவியாளர் ஒருவரின் உதவியுடன் பல்வேறுபட்ட வர்ணம், மற்றும் கம் என்பவற்றைப் பயன்படுத்தி விசித்திரமான ஆக்கங்களை மேற்கொண்டு உல்லாசப் பயணிகளுக்கு விற்பனை செய்கின்றார்"

மேலுள்ள சம்பவத்தில் குறிப்பிடப்படும் உற்பத்திக் காரணிகள் இரண்டினை அவற்றிற்குரிய உதாரணம் மூலம் தருக?

ii. பின்வருவனவற்றில் தாக்கம் செலுத்தும் வியாபாரச் சூழல்களைக் குறிப்பிடுக.

A - உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கொள்கைகள்

B - பணவீக்கம்

C - நாட்டினுள் வெளிநாட்டு மூலதனங்கள் உட்பாய்ச்சப்படல்

D - கணனி மயப்படுத்தப்பட்ட இயந்திரங்களின் பயன்பாடு

iii. இலாப நோக்காகக் கொண்ட தனியார் துறை, அரச துறை வணிகங்களுக்கு ஒவ்வொரு உதாரணம் வீதம் தருக?

iv. பின்வருவன வியாபார நிறுவனங்கள் சிலவாகும்.

A -வரையறுக்கப்பட்ட கோசல கம்பனி

B - நந்தாவும் புதல்வர்களும்

C - இலங்கை தபால் திணைக்களம்

D - ரொஷானி ஸ்டோர்ஸ்

மேலே குறிப்பிட்ட வியாபார அமைப்புக்களை உரிமை அடிப்படையில் தனியார் துறை, அரச துறை என வேறுபடுத்துக?

04. i. தனியார் உரிமை வியாபாரமொன்றை ஆரம்பிப்பதைவிட பங்குடைமை வியாபரமொன்றை ஆரம்பித்தால் கிடைக்கும் அனுகூலங்கள் 4 தருக?

ii. கூட்டுறவு சங்கமொன்றின் விஷேட பண்புகள் 2 தருக?

iii. தனியுடைமை வணிகமொன்றின் பெயரினைப் பதிவு செய்வதன் மூலம் கிடைக்கும் பயன்கள் 4 தருக?

iv. பின்வரும் பண்புகளைக் கருத்திற் கொண்டு தரப்பட்டுள்ள வியாபார ஒழுங்கமைப்புக் குரிய பண்புகளைப் பூரணப்படுத்துக.

பண்பு	தனியுடைமை	பங்குடைமை	கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
உரிமை பொறுப்பு சட்டஆளுமை நிலைப்புத்தன்மை			

பகுதி (II)- கணக்கீடு

இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடைளிக்குக.

05. 1. 2017.01.01 இல் ஆரம்பிக்கப்பட்ட உபமாலியின் வியாபாரத்தில் முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

A) உபமாலி ரூ 500 000 மூலதனமாக இடல்

B) ரூ 100 000 பெறுமதியான வங்கிக் கடன் கிடைக்கப் பெறல்

C) ரூ 4000 பெறுமதியான வாடகை காசாக செலுத்தல்

D) ரூ 200 000 பெறுமதியான பண்டத்தொகை அமரவிடம் கடனுக்கு கொள்வனவு

E) ரூ 60 000 பெறுமதியான காரியாலய உபகரணம் காசுக்குக் கொள்வனவு

F) அமாலிக்கு ரூ 100 000 செலுத்தல்

G) உபமாலி மேலதிக மூலதனமாக ரூ 60 000 இடல்

தேவைப்படுவது :-

மேலுள்ள கொடுக்கல் வாங்கல் மூலம் கணக்கீட்டுச் சமன்பாட்டில் சொத்து, பொறுப்பு, மற்றும் உரிமை என்பவற்றில் ஏற்படும் தாக்கம் அதிகரிப்பா? அல்லது குறைவா என்பதைக் காட்டுக?

விடையளிப்பதற்காக உமக்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக. முதலாவது கொடுக்கல் வாங்கல் கீழே தரப்பட்டுள்ளது.

	சொத்து	=	பொறுப்பு	+ உரிமை
A	அதிகரிப்பு	=	-	அதிகரிப்பு
B				
C				
D				
E				
F				
G				

2. பின்வருவன நிமால் வணிகத்தின் 2017 பெப்ரவரி மாத்தில் முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களாகும். ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் உரிய இரட்டைப் பதிவினை எழுதிக் காட்டுக ?

பெப்ரவரி 01 உரிமையாளர் ரூ 400 000 மூலதனமிட்டார்

02 ரூ 100 000 பெறுமதியான பண்டங்கள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.

03 ரூ 60 000 மாதாந்தம் சம்பளம் செலுத்தல்

04 ரூ 150 000 பெறுமதியான பண்டம் உடன் காசுக்கு விற்பனை

05. ரூ 200 000 பெறுமதியான வங்கிக் கடன் பெறல்

06. ரூ 80 000 மேலதிக மூலதனமிடல்

06. i. காசுப் புத்தகம் என்றால் என்ன?

ii. பின்வரும் கூற்றுக்கள் உண்மை / உண்மையன்று எனக் குறிப்பிடுக.

A. காசுப்புத்தகம் (காசேடு) பிரதானமாக இரண்டு தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது.

B. வியாபார நிறுவனங்களில் பண்டங்களில் குறித்த விலையில் இருந்து குறைத்துக் கொள்ளும் பெறுமதி காசுக் கழிவு ஆகும்.

C. இறுதியில் பேரேட்டுக் கணக்குகளின் வரவுப்பக்க, செலவுப்பக்க நிரல்களின் கூட்டுத்தொகைகளை தனித்தனியாக உள்ளடக்கிக் காட்டும் பட்டியல் பரீட்சை மீதி ஆகும்.

D. பரீட்சை மீதியொன்றில் வரவுப்பக்க, செலவுப்பக்க நிரல்களின் கூட்டுத்தொகை சமப்படும்போது கணக்கீட்டு செயற்பாட்டில் வழுக்கல் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்யலாம்.

iii. வங்கிக் கூற்றொன்றில் வரவுப்பக்க, செலவுப் பக்க நிரல்களில் காட்டப்படும் விடயங்கள் இவ்விரண்டு வீதம் எழுதுக?

iv. 2017.05.31 இல் அமில வியாபாரத்தின் வங்கிக்கணக்கில் காணப்பட்ட வரவு மீதி வங்கிக் கணக்கு மீதியுடன் சமப்படவில்லை. பின்னர் வேறுபாட்டுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டன. அவை வருமாறு:-

1) மார்ச் மாதத்தினுள் வைப்புச் செய்யப்பட்ட அம்மாதத்தினுள் தீர்வையாகாத காசோலை ரூ 8000

2) வியாபார வங்கிக் கணக்கில் உள்ளடக்கப்படாத வங்கிக் கட்டணம் ரூ 800

3) மே மாத்தினுள் வழங்கப்பட்டு அம்மாதத்தினுள் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப் படாத காசோலை ரூ 6000 ஆகும்.

4) வங்கிக்கு நேரடியாக கிடைக்கப்பெற்ற வியாபார வங்கிக் கணக்கில் உள்ளடக்கப் படாத கடன்பட்டோர் நேரடி வைப்பு ரூ 12000 ஆகும்.

தேவைப்படுவது :-

(ஆ) 2017.05.31 இல் சீராக்கப்பட்ட வங்கிக் கணக்கு மீதி

(ஆ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

07. i. கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தவதன் மூலம் வியாபாரிகளுக்கு பயன்கள் / வசதிகள் 2 தருக?

ii. தொலைபேசி வங்கிச் சேவையினூடாக (Tele Banking) வியாபாரி ஒருவருக்கு மேற்கொள்ள முடியுமான செயற்பாடுகள் 2 தருக?

iii. பரீட்சை மீதி வெளிக்காட்டாத வழுக்கல் இரண்டைக் குறிப்பிட்டு அதில் ஒன்றுக்கு உதாரணம் தந்து விளக்குக?

iv. 2018.01.01 இல் விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்த இசுரு வியாபாரத்தின் 2018.06.30 இல் பேரேடுகளில் இருந்து எடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு:-

	ரூபா		ரூபா
காசு	80 000	விற்பனை	730 000
12 வங்கிக் கடன்	180 000	கடன்பட்டோர்	70 000
கொள்வனவு	300 000	கடன் கொடுத்தோர்	48 000
மின்கட்டணம்	12 000	கொடுத்த கழிவு	8 000
பெற்ற கழிவு	16 000	தளபாடம்	40 000
இயந்திர உபகரணம்	800 000	சம்பளம் செலுத்தல்	60 000
எழுதி கருவிச் செலவு	10 000	12% முதலீடு	100 000
மதலீட்டு வருமானம்	6 000	2018.01.01 இல் மூலதனம்	500 000

தேவைப்படுவது :-

(அ) மேலுள்ள மீதிகளைக் கொண்ட பரீட்சை மீதிகளைத் தயாரிக்க?